பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | கார்த்திகை 02 | ஞாயிற்றுக்கிழமை | 19.11.2023 | அதிர்வு 110

## ஆசிரியர் ஒருவர் சுட்டுக் கொலை!



தனியார் கல்வி நிலையத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

06▶



ஒரு படகில் கைதான 10 மீனவர்கள்



மற்றைய படகில் கைதான 12 மீனவர்கள்

# நேற்று தமிழக மீனவர்கள் 22 பேர் மதியம் கைது; இரவில் விடுவிப்பு!

## இராமேஸ்வரத்தில் நிர்மலா சீதாராமனிடம் நேரில் முறையீடு; அவரின் தலையீட்டினால் கொழும்பு விரைந்து நடவடிக்கை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பருத்தித்துறைக் கடற்பரப்பில் இலங்கைக் கடற்படையினரால் நேற்று மதியம் இரண்டு படகுகளுடன் மடக்கப்பட்டு, கைது செய்யப்பட்டு, காங்கேசன்துறை துறைமுகத்துக்குக் கொண்டு வரப்பட்ட 22 இந்திய மீனவர்களும், இந்திய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனின் தலையீட்டின் பேரில் உடனடியாக நேற்று நள்ளிரவே அவர்களின் படகுகளுடன் விடுவிக்கப்பட்டுத் தமிழகத்துக்குப் பத்திரமாக அனுப்பி வைக்கப்பட்டனர்.

04▶



நிர்மலா சீதாராமனுடன் பேசும் மீனவர் பிரதிநிதிகள்

## சீன ஜனாதிபதியின் விசேட தூதுவர் குழு இலங்கைக்கு வருகை



சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்கின் விசேட தூதுவர் ஷென் ஹிகின் உள்ளிட்ட

06▶

## வவுனியாவில் கோர விபத்து

### பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட இருவர் உயிரிழப்பு



(கே.வசந்தரூபன்)

வவுனியா, ஏ - 9 வீதி சாந்த சோலை சந்தியில் இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட இருவர் உயிரிழந்துள்ளனர் என்று வவுனியா

06▶

## காங்கேசன் – நாகை இடையே சேவையில் ‘சிவகங்கை’ கப்பல்

### நிறுவனத் தலைவர் நிரஞ்சன் தகவல்



காங்கேசன்துறை – நாகபட்டினம் இடையிலான பயணிகள் கப்பல் சேவை ஜனவரி முதல் வாரத்தில் காலநிலையைப் பொறுத்து ஆரம்பிக்கப்பட இருப்பதாக இந்தியாவில் பதிவு

06▶




ஆளுநர்கள் மட்டத்தில் சில மாற்றங்கள் அடுத்த மாதத்திலேயே வருகின்றன என சில தரப்புகள் தகவல் வெளியிடுகின்றன.

முன்னாள் விமானப் படை தளபதியாகவும், பின்னர் முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரியாகவும் இருந்த விமானப் படை மார்ஷல் ரொஷான் குணதிலக தற்போது தலைநகரத்தையும் உள்ளடக்கிய மேல் மாகாணத்தின் ஆளுநராகப் பணியாற்றுகின்றார். அவர் விரைவில்

06▶



# களனிதிஸ்ஸ மின்னுற்பத்தி நிலையம் ஆறு வாரங்களுக்கு மூடப்பட்டுள்ளது

களனிதிஸ்ஸ மின்னுற்பத்தி நிலையம் ஆறு வாரங்களுக்கு மூடப்பட்டுள்ளது.

பராமரிப்பு பணிகள் காரணமாக நேற்று முன்தினம் முதல் ஆறு வாரங்களுக்கு மின்னுற்பத்தி நிலையம் மூடப்பட்டுள்ளது என இலங்கை மின்சார சபையின் பொறியியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதனால் தேசிய மின்கட்டமைப்புக்கு 165 மெகாவாட் மின் இழப்பு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, தொழில்நுட்பக் கோளாறு காரணமாக செயலிழந்த நுரைச்சோலை லக்விஜய அனல் மின் நிலையத்தின் இரண்டாவது மின் உற்பத்தி இயந்திரத்தை செயற்படுத்த சுமார் ஐந்து நாள்கள் செல்லுமென மின்சார சபை எதிர்வுகூறியுள்ளது.

மின் உற்பத்தி நிலையத்தின் இரண்டாவது மின் பிறப்பாக்கியில் ஏற்பட்ட திடீர் கோளாறு காரணமாக, நேற்று முன்தினம் முதல் மின் உற்பத்தியை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதனால் தேசிய மின் கட்டமைப்பிற்கு 300 மெகாவாட் மின் இழப்பு ஏற்பட்டுள்ளது.

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் மூன்றாவது மின் உற்பத்தி இயந்திரமும் தற்போது செயலிழந்து காணப்படுகின்றது.

பராமரிப்பு காரணங்களுக்காக மூன்றாவது மின் உற்பத்தி இயந்திரம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதனால் தேசிய மின் கட்டமைப்பிற்கு 300 மெகாவாட் மின் இழப்பு ஏற்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், மின் விநியோகத்தில் எவ்வித இடையூறும் ஏற்படாது என மின்சார சபை உறுதிப்படுத்தியுள்ளது.

தொடர்ந்து நீர் மின் உற்பத்தி இடம்பெறுவதுடன், மின் விநியோகம் இடம்பெற்று வருவதாகவும் மின்சார சபை அறிவித்துள்ளது.

நீர் மின் நிலையங்களுடன் தொடர்புடைய நீர் நிலைகளின் நீர் கொள்ளளவு 88 வீதமாக அதிகரித்துள்ளது.

# சீன எக்ஸிம் வங்கி - இலங்கை இடையிலான ஒப்பந்தம் பாரிஸ் கிளப்பிற்கு வழங்கப்பட்டது

நாட்டின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சீனாவின் எக்ஸிம் வங்கிக்கும் இலங்கைக்கும் இடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கை, பாரிஸ் கிளப் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவை மேற்கோள்காட்டி, ப்ளூம்பெர்க் செய்தி சேவை இதனை தெரிவித்துள்ளது.

இதன் ஊடாக இந்த ஆண்டு இறுதிக்குள் கடன் வழங்குனர்கள் தங்கள் கடன் மறுசீரமைப்பு முன்மொழிவுகளை முன்வைப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடன் மறுசீரமைப்பு திட்டத்தை முன்கொண்டு செல்ல சீனாவின் நிலைப்பாட்டை இலங்கை எதிர்பார்த்திருந்தது.

இந்த நிலையில், இலங்கையின் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்திற்கான சர்வதேச நாணய நிதியத்தின் அங்கீகாரத்தை இந்த வருட இறுதிக்குள் இலங்கை பெற்றுக் கொள்ளும் என மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்தார் என அந்தச் செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# டிராக்டர் பெட்டி கவிழ்ந்ததில் ஹட்டனில் எட்டுப் பேர் காயம்!

ஹட்டன் பிரதேசத்தில் இருந்து நாவலப்பிட்டி நோக்கி பயணித்த டிராக்டர் ஒன்று நேற்று வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 8 பேர் காயமடைத்துள்ளனர்.

டிராக்டரில் இணைக்கப்பட்டுள்ள பின்புற பெட்டிப் பகுதி இயந்திரத்தை விட்டு கழன்று வீதியில் கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் திக் ஓயா ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக செர்க்கப்பட்டுள்ளனர் என ஹட்டன் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.




வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
“ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர,
மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்.”
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PICKUP & DROP
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
VAN FOR RENT A/C
CALL NOW
+94 773 776 882
+94 753 770 230

# சிறுபோகத்தில் பயிர் சேதங்களுக்கு நட்டஈடு இன்று முதல் வழங்கப்படும்

சிறுபோகத்தில் சேதமடைந்த பயிர்களுக்கான நட்டஈடு இன்று முதல் விவசாயிகளுக்கு வழங்கப்படும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

முதற்கட்ட இழப்பீடுகளின் கீழ் 389 மில்லியன் ரூபாவை விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்க விவசாய மற்றும் கிராமிய காப்புறுதி சபை நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சு கூறியுள்ளது.

இதற்கமைய, இன்று காலை 09 மணி முதல் அங்குணுகொலபெலஸ்ஸவில் 250 விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கப்படவுள்ளது.

கடந்த முறை சிறுபோகத்தில் 65 ஆயிரம் ஏக்கர் வறட்சியினால் சேதமடைந்துள்ளது. 11 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை அறுவடைக்கு தயாராக விருந்த நிலையில் மழையினால் அழிவடைந்தது.



# சிவில் சமூகக் குழுவின் கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் முக்கியஸ்தர்கள்









வடக்கு– கிழக்கு சிவில் சமூக குழுவின் ஏற்பாட்டில் தந்தை செல்வா கலையரங்கில் அரசியல் கலந்துரையாடலொன்று யாழில் நேற்று இடம்பெற்றது.

பேராசிரியர் பொன். பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் அரசியல் ஆய்வாளர்களான அ.யதீந்திரா, நிலாந்தன், மூத்த ஊடகவியலாளர் வீரகத்தி தனபாலசிங்கம் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

இந்த அரசியல் கலந்துரையாடலில் வடக்கு கிழக்கில் உள்ள தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்கள், மதகுருமார், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

வடக்கு கிழக்கு மாகாணங்களை சேர்ந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்த் தேசியப் பரப்பில் பயணிக்கின்ற அனைத்து தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகள் ஒன்றுகூடி கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

“இன்றைய நிலையில் தமிழ் தேசியக் கட்சிகள் செய்ய வேண்டியது?” எனும் தொனிப் பொருளில் குறித்த கருத்தாடல் இடம்பெற்றது. தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒன்றுபட்ட செயற்பாடு குறித்து இக்கருத்தாடலில் வலியுறுத்தப்பட்டது.

## நேற்று தமிழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பருத்தித்துறைக் கடற்பரப்பில் இரண்டு படகுகளில் அத்துமீறி நுழைந்து, கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றத்துக்காக நேற்று மதியம் 22 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். நேற்று மாலை 5 மணிக்குக் காங்கேசன்துறைத் துறை முகத்துக்கு அவர்கள், அவர்களின் படகுகளுடன் கொண்டு வரப்பட்டனர்.

இவ்வாறு இராமேஸ்வரம் மீனவர்கள் 22 பேர் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட செய்தி இராமேஸ்வரத்தில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியிருந்தது.

இதேநேரம் இராமேஸ்வரத்துக்கு இரு நாள் பயணமாக இந்தியாவின் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் நேற்று சென்ற நிலையில், மீனவர்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் நிதி அமைச்சரை நேரில் சந்தித்து கைதான தமது உறவுகளை அவர்களின் படகுகளுடன் உடன் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

மீனவர்களின் கோரிக்கையின் பேரில் இலங்கை ஜனாதிபதியைத் தொடர்பு கொண்ட இந்திய நிதி அமைச்சர், மீனவர்களின் விடுதலை தொடர்பில் நடவடிக்கை எடுக்கக் கோரினார்.

அதனையடுத்து 22 மீனவர்களையும் கையோடு விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அவர்களது படகுகளில் அவர்களை ஏற்றி அவர்களை இலங்கையின் கடல் எல்லை வரை இலங்கைக் கடற்படையினர் கூட்டிச் சென்றனர். அங்கிருந்து இன்று அதிகாலை தமிழகத்துக்கு அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர்.

# மாணிக்கக்கற்களை பெற்றுக்கொண்டு நிதி மோசடியில் ஈடுபட்ட நபர் கைது!



சுமார் 8 கோடி ரூபா பெறுமதியுடைய 10 மாணிக்கக்கற்களை பெற்றுக்கொண்டு நிதி மோசடியில் ஈடுபட்ட சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலன்னறுவையை சேர்ந்த 78 வயதான ஓய்வு பெற்ற மீன்பிடிப் பரிசோதகர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்தேகநபர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கண்டியில் உள்ள இரத்தினக்கல் மற்றும் தங்க நகை விற்பனையகம் ஒன்றில் 21 இலட்சம் ரூபாவிற்கும் அதிகமான பெறுமதியான நகைகளைத் திருடிய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

35 வயதான கட்டுகஸ்தோட்டையை சேர்ந்த பெண் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

அதே கடையில் ஊழியராக பணிபுரிந்த அவர், 09 தங்க மோதிரங்கள் மற்றும் 04 வெள்ளி மோதிரங்களை திருடிச்சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ஆசிரியர்களாக நடித்து பெற்றோர்களிடம் பண மோசடியில் ஈடுபட்ட இருவர் கைது!

ஆசிரியர்களாக நடித்து பெற்றோர்களிடம் பண மோசடி செய்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிராந்துருகோட்டே பகுதியை சேர்ந்த 25 மற்றும் 37 வயதான இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நபர்கள் பாடசாலை மாணவர்களின் பெற்றோரைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு, அவர்களின் பிள்ளை சுகவீனமடைந்துள்ளனர் எனவும் அவசர சிகிச்சைக்கு பணம் அனுப்புமாறும் தெரிவித்து, வங்கிக் கணக்கு விவரத்தை வழங்கிப் பணம் பெற்றுள்ளனர்.

கம்பஹா, ஜா-எல, கந்தானை, பமுனுகம, வீரகுல, பூகொடை, பேராதெனிய பகுதிகளில் உள்ள பெற்றோரிடம் இருந்து இவ்வாறு பணம் பெறப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.



சந்தேகநபர்கள் 25 லட்சம் ரூபாவிற்கும் அதிகமான பணத்தை மோசடி செய்துள்ளனர்.

இவ்வாறு பண மோசடியில் ஈடுபடும் நபர்களிடம் ஏமாற வேண்டாம் எனப் பொலிஸார் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளனர்.

# சுகாதார அமைச்சிற்கு புதிய செயலர் நியமனம்



சுகாதார அமைச்சின் செயலாளராக விசேட வைத்திய நிபுணர் பாலித மஹிபால நியமிக்கப்பட்டுள்ளார்.

சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக்க சந்திரகுப்த ஓய்வுபெறவுள்ளார். இந்த நிலையில், இந்தப் புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

விசேட வைத்திய நிபுணர் பாலித மஹிபால, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமாக சில காலம் செயற்பட்டிருந்தார்.

பின்னர் உலக சுகாதார ஸ்தாபனத்தின் உயர் பதவிகளிலும் அவர் செயற்பட்டிருந்தார்.

இந்த நிலையில், சுகாதார அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள விசேட வைத்திய நிபுணர் பாலித மஹிபால, எதிர்வரும் திங்கட்கிழமை தமது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார்.

# மாணவனைத் தாக்கிய ஆசிரியர் கைதாகிப் பிணையில் விடுவிப்பு

### யாழ். அரியாலைப் பகுதியில் சம்பவம்



யாழ்ப்பாணம் அரியாலை பகுதியில் உள்ள பாடசாலையில் மாணவனைத் தாக்கிய ஆசியரொருவர் கைது செய்யப்பட்டு நேற்று நீதிமன்றப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

தரம் 9 இல் கல்வி கற்கும் மாணவரொருவர் பாடசாலைக்கு வராத நிலையில் ஆசிரியரால் தாக்கப்பட்டுள்ளார்.

மாணவன் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் ஆசிரியர் பொலிஸார் கைது செய்யப்பட்டார்.

விசாரணைக்குப் பின்னர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட ஆசிரியர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளிநாட்டுத் தூதுவர் பதவி ஒன்றுக்கு மாறுகின்றார் எனத் தகவல்.

அவரது இடத்துக்கு மேல் மாகாண ஆளுநராக, தற்போது ஊவா மாகாண ஆளுநராக இருக்கும் முஸ்ஸமிலும், ஊவா மாகாண ஆளுநர் பதவிக்கு செந்தில் தொண்டமானும் நியமன மாகின்றார்கள் என்று தெரிகிறது.

இப்போது கிழக்கு மாகாண ஆளுநராக இருக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செந்தில் தொண்ட மான் தமக்கு ஊவா மாகாண ஆளுநர் பதவியே வேண்டுமென ஆரம்பத்தில் கோரியிருந்தார். அந்தப் பதவி கடைசி யாக அடுத்த மாதத்தில் அவருக்குக் கிடைக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

அண்மைக் காலம் வரை சுற்றுச்சூழல் அமைச்சராக இருந்த நஸீர் அஹமட், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தொடர் பான வழக்கில் தோற்று, எம்.பி. பதவி யையும், அதனால் அமைச்சர் பதவி யையும் இழந்து, இப்போது வீட்டில் இருக்கின்றார். முன்னர் கிழக்கு மாகாண முதலமைச்சராகவும் அவர் இருந்துள்ளார்.

இப்போதைய கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஊவா மாகாண ஆளுநராகப் பதவியேற்கும் போது, கிழக்கு ஆளுநராக நஸீர் அஹமட் நியமனமாவார் என்று கூறப்படுகிறது.

இதே சமயம் இந்த மாற்றங்களின் போது வடக்கு ஆளுநர் பதவியிலும் ஆள் மாறலாம் என்ற பேச்சு ஒன்று உண்டு. எனினும் விவரம் தெரிய வரவில்லை.'

எது, எப்படி என்றாலும் ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்கவின் தற்போ தைய பதவிக்காலம் இன்னும் பத்து அல்லது பதினொரு மாதங்கள்தான். அடுத்த மாதத்தில் ஆளுநர் பதவிகளில் மாற்றம் வரும் என்றால், புதிய பதவிக ளில் அவர்கள் இன்னும் பத்து மாதங்கள் நீடிக்கலாம். அவ்வளவுதான். அதற்குப் பின்னர் புதிய ஜனாதிபதி – அது மீளவும் ரணிலாகவும் கூட இருக்கலாம் – புதிய பதவிக் காலத்துக்குப் பதவியேற்கும் போது புது ஆளுநர் நியமனங்கள் நடக்கும். இப்போது இருக்கும் ஆளுநர்களில் எத்தனை பேருக்கு அப்போது இடம் கிடைக்குமோ.. ? ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம்...!'

\+ + +

'டான்' தொலைக்காட்சிக் குழுமத்தின் நிறுவுனர் குகநாதனின் பின்புல வழிகாட் டலில் – வடக்கு, கிழக்கு சிவில் சமூக ஏற்பாட்டில் – நேற்று யாழ்ப்பாணத்தில் அரசியல் கலந்துரையாடல் ஒன்று நடை பெற்றது. தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள், ஆறு நாடாளுமன்ற உறுப் பினர்கள், வடக்கு மாகாண அவைத் தலைவர், முன்னாள் பிரதேச சபைக ளின் தலைவர்கள், ஊடகவியலாளர்கள், முக்கிய பிரமுகர்கள் என்று காத்திர மான சபை. அழைப்பு அனுப்பப்பட்டவர்க ளில் முக்காவாசிப் பகுதியினர் சமூகம் தந்தமை ஏற்பாட்டாளர்களுக்கு வெற்றி. எனினும் notable absentees (குறிப் பிடத்தக்க வகையில் சமூகம் தராதோ ரும்) இருந்தமை மறுக்கத்தக்கது அல்ல. அவை பற்றிய உள்ளார்ந்த அம்சங் கள் குறித்தும் மற்றைய விவரங்கள் பற் றியும் நாளை பார்ப்போமா நண்பர் களே...?!

## வவுனியாவில் கோர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று மாலை இடம்பெற்ற இந்த விபத்து தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா, ஓமந்தை பகுதியில் இருந்து வவுனியா நகர் நோக்கிப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மோட் டர் சைக்கிளில் பயணித்துள்ளார். அந்த மோட்டர் சைக்கிள் வவுனியா, ஏ – 9 வீதி சாந்தசோலை சந்திப் பகுதியில் பய ணித்த போது, எதிர்த் திசையில் இருந்து வயோதிபர் ஒருவர் செலுத்தி வந்த மோட் டார் சைக்கிள் சாந்தசோலை சந்தியில் திரும்ப முற்பட்டுள்ளது. இதன்போது இரு மோட்டார் சைக்கிள்களும் மோதி விபத்துக்குள்ளாகின.

விபத்தில் படுகாயமடைந்த இருவரும் உடனடியாக மீட்கப்பட்டு வவுனியா வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டனர். எனி னும், பொலிஸ் உத்தியோகத்தரான இளைஞர் வைத்தியசாலையில் சேர்க்கப் பட்ட போதே மரணமடைந்துள்ளார். மற்றைய மோட்டார் சைக்கிளில் பயணித்த வயோதிபர் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட போதும் சிகிச்சை பல னின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் அக்கராயன் பகுதியில் பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவில் பணிபுரியும் வெலிஓயா பகுதியைச் சேர்ந்த திஸாநாயக்கா (வயது 27), சாந்தசோலையைச் சேர்ந்த சண்முகம் நாதன் (வயது 63) ஆகிய இருவருமே மரணமடைந்தவர்களாவர்.

இந்த விபத்து தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெ டுத்து வருகின்றனர்.

## சீன ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தூதுக் குழுவினர் உத்தியோகபூர்வ விஜயம் மேற் கொண்டு நேற்று மாலை இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என்று வெளிவிவகார அமைச்சு தெரி வித்துள்ளது.

அந்தத் தூதுக் குழுவினர் மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ளனர்.

எதிர்வரும் 21ஆம் திகதி செவ் வாய்க்கிழமை வரை நாட்டில் தங்கி யிருக்கும் ஷென் ஹிகின் உள்ளிட்ட குழுவினர் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தன உள்ளிட்ட அரசின் உயர்மட்டத்தினரைச் சந்தித்து இரு தரப்பு கலந்துரையாடல்க ளில் ஈடுபடவுள்ளனர்.

இதேவேளை, கொழும்புத் துறைமுக நகர் திட்டம், அம்பாந்தோட்டையில் உத்தேசிக்கப்பட்டுள்ள எண்ணெய் சுத்தி கரிப்பு நிலையம் உட்பட பல்வேறு சீன முதலீட்டு திட்டங்கள் தொடர்பில் அரச தரப்பினருடன் அவர்கள் கலந்துரை யாடவுள்ளனர். கண்டி தலதா மாளிகை உள்ளிட்ட இடங்களுக்கும் அவர் கள் விஜயம் செய்யத் திட்டமிட்டுள் ளனர்.

மாலைதீவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள முகமது முய்சு வின் பதவியேற்பு நிகழ்வு நேற்றுமுன் தினம் இடம்பெற்றது. இதில் பங்கேற் கும் வகையில் முதலில் மாலைதீவுக் கான விஜயத்தை சீன ஜனாதிபதியின் விசேட தூதுவர் ஷென் ஹிகின் முடித்துக் கொண்டு இலங்கை அரசின் அழைப்பின் பேரில் இங்கு வந்துள்ளார்.

## காங்கேசன் – நாகை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்யப்பட்ட "இந்த ஸ்ரீகப்பல் சேவைகள் தனியார் நிறுவனத்தின்" (IndSri Ferry Services Pvt Ltd) முகாமைத்துவப் பணிப் பாளர் சோ.நிரஞ்சன் நந்தகோபன் தெரிவுத்தார்.

இக்கப்பல் சேவையை நடத்துவதற் கான பூர்வாங்க அனுமதிகள் இரண்டு அரசாங்கங்களிடம் இருந்தும் கிடைத்து விட்டன எனவும், இதற்காக இந்திய



கொடியின் கீழ் பதிவுசெய்யப்பட்ட "சிவ கங்கை" என்ற கப்பல் தமது நிறுவனத் தினால் சுவீகரிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இக்கப்பல் டிசம்பர் நடுப்பகுதியில் நாகபட்டினத்திற்கு வந்து சேரும் என் றார் அவர்.

இக்கப்பலில் 150 பயணிகள் தலா 60 கிலோ பொதிகளுடன் (check in baggage) பயணிக்கலாம்.

ஒரு வழிப் பயணக் கட்டணமாக இந்திய ரூபாவில் 4,250 மற்றும் வரிகளும் அறவிடப்படும். இலங்கை ரூபாவில் 17,000 மற்றும் வரிகள் அறவிட உத்தேசிக் கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித் தார்.

இலங்கையின் பிரதான விற்பனை முகவர்களான "மெற்றோ வொயேஜஸ்" மூலமாகவோ அல்லது அவர்களின் துணை முகவர்களினூடாகவோ அல்லது விரைவில் வெளியிடப்பட இருக்கும் android & iOS app மூலமாகவோ கப்பல் பயணத்துக்கான பதிவுகளை மேற் கொள்ளமுடியும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## ஆசிரியர் ஒருவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தச் சம்பவம் அனுராதபுரம், தலாவை பிரதேசத்தில் நேற்று இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

அதே பிரதேசத்தைச் சேர்ந்த அமல வீர நாணயக்கார என்ற 27 வயது இளை ஞரே இவ்வாறு சுட்டுக் கொலை செய் யப்பட்டுள்ளார்.

அந்த இளைஞர் தனது வீட்டு வாசலில் நண்பர்களுடன் உரையாடிக் கொண் டிருந்த வேளை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், அவர் மீது கைத்துப்பாக் கியால் சுட்டு விட்டுத் தப்பியோடியுள்ளனர்.

சூட்டுக் காயங்களுக்குள்ளான இளை ஞர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படும் வழியில் உயிரிழந்துள்ளார்.

அவரின் சடலம் தலாவை பிரதேச வைத்தியசாலையில் பிரேத பரிசோத னைக்காக வைக்கப்பட்டுள்ளது.

கொடுக்கல் – வாங்கல் தகராறு கார ணமாக இந்தக் கொலை இடம்பெற் றுள்ளது என்று பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வரும் பொலிஸார், கொலைச் சந்தேகநபர்களைக் கைது செய்வதற் கான நடவடிக்கைகளையும் ஆரம்பித் துள்ளனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## உரிமையும் பொறுப்பும்

உரிமைகளுக்காகப் போராடும் சமூகத்துக்கு - இனத்துக்கு - அந்தப் போராட்டத்தை ஒட்டி பொறுப்புகளும் இருக்கின்றன.

நாம் உரிமைகளைக் கோரும் அதே காரணங்களுக்காக நமக்கு பொறுப்புகளும் வந்து விடுகின்றன. அதனை நாம் மறந்துவிடக் கூடாது. உரிமையைக் கோருவதிலும், ஈட்டுவதிலும் காட்டும் ஈடுபாடு, தீவிரம், உறுதிப்பாடு ஆகியவற்றை, பொறுப்புக்களை நிலை நிறுத்துவதிலும் அல்லது நிறைவு செய்வதிலும் கண்ணியத்துடன் காட்டுவது நமது கடப்பாடாகும்.

இப்போது மாவீரர் வாரம் வருகின்றது. எங்கள் இனத்துக்காக - எங்கள் மக்களுக்காக - எங்கள் மண்ணுக்காக - தங்களை மண்ணுக்குள் விதைத்துக் கொண்ட தற்கொடையாளர்களை தமிழர் தேசம் நினைவேந்தும் நாள் இது.

நினைவேந்தலுக்கான உரித்து எங்களின் அடிப்படை உரிமை. அதற்காகவும் இன்று போராடும் நிலைமை.

அந்த உரிமையை எங்களுக்கு மறுப்பதற்காக பௌத்த - சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களின் ஏவல் படைகள் தீவிரத்துடன் நிற்கின்றன.

அந்த உரிமை மறுப்பை சட்ட ரீதியானதாக உலகுக்குக் காட்டுவதற்காக ஆட்சித் தரப்பின் ஏவல் படைகளில் ஒன்றான பொலிஸ், நீதிமன்றங்களை நாடத் தொடங்கியுள்ளது. நினைவேந்தல்களுக்குத் தடை விதிக்கக் கோரும் விண்ணப்பங்களுடன் இந்த பொலிஸ் தரப்பினர் நீதிமன்றங்கள் தோறும் ஏறத் தொடங்கி இருக்கின்றனர்.

பௌத்த - சிங்கள அரசுக் கட்டமைப்பின் இறுக்கமான சட்டங்களின் கீழும், இயன்றவரை இயற்கை நீதியைத் தன்னும் நடைமுறைப்படுத்தச் செய்யும் நன்னோக்குடன், இந்தத் தடை உத்தரவுக் கோரிக்கைகளை நீதிமன்றங்கள் நிராகரிக்கும் சூழல் தென்படுகின்றது.

அதனால் நினைவேந்தலைத் தடுக்கும் பொலிஸ்தரப்பின்முதற்கட்ட அணுகுமுறைபின்னடைவுகளைக் காணக்கூடிய சூழல் தெரிகின்றது.

இந்தச் சமயத்தில்தான் நம் மாவீரரை நினைவேந்தும் நமது பொறுப்பும் கடப்பாடும் முக்கியத்துவம் பெறுகின்றன.

நினைவேந்தலுக்கு நீதிமன்றம் மூலம் தடுப்புப் போடும் முயற்சி சறுக்குகிறது என்பதை அறிந்து, நாம் நிலைமை எல்லை மீறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

நினைவேந்தலின் எல்லையையும் முறைமையையும் வகுத்துச் செயல்பட வேண்டியவர்கள் நாம்தான். எங்கள் நினைவேந்தல் ஏற்பாடுகளை இலங்கை தனது கொடூர சட்டங்கள் மூலம் தவறாக அர்த்தப்படுத்தி, அந்த செயற்பாடு களை குழப்புவதற்கு இடம் அளிக்காமல் பொறுப்புடனும், கடப்பாட்டுடனும், ஒழுக்கம் - கண்ணியத்துடனும், விவேகத்துடனும், அதேநேரம் நமது உரிமையை விட்டுக் கொடுக்காமலும் நாம் விடயங்களை முன்னெடுக்க வேண்டும்.

மாவீரர்களின் ஈகத்தையும், தியாகத்தையும், தற்கொடையையும் நமது அரசியல் கட்சிகளும், இயக்கங்களும், தரப்புக்களும் தத்தமது சுயநல அரசியலுக்கும் ஆதாயங்களுக்கும் பயன்படுத்தும் தந்திரோபாயமாக ஆக்கிக் கொள்ளாமல், சத்திய இலட்சியத் தீயில் தம்மையே ஆகுதியாக்கி, அழித்துச் சரித்திரமாகிவிட்ட எமது வீரர்களையும், அவர்களின் ஈகங்களையும் நாம் சிந்தையில் நிறுத்தி, நேரிய வழியில் - சீரிய முறையில் - நினைவேந்துவோம். அதுவே, அந்த உயரிய இலட்சிய புருஷர்களுக்கு நாம் செய்யக் கூடிய கைமாறாக இருக்கும்.

# நாட்டில் கடும் மின்னல் தாக்கம் ஏற்படக்கூடும் என எச்சரிக்கை



நாட்டின் பல பகுதிகளில் கடும் மின்னல் தாக்கம் ஏற்படக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேல், மத்திய, கிழக்கு, சப்ரகமுவ, வடமத்திய, வடமேல், ஊவா மாகாணங்களிலும் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களிலும் மாலை அல்லது இரவு வேளையில் இடைக்கிடையே மழையுடன் கூடிய கடும் மின்னல் தாக்கங்கள் ஏற்படுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் பலத்த காற்று வீசுமெனபதுடன், மின்னல் தாக்கங்களின் போது ஏற்படும் அனர்த்தங்களைத் தவிர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

# வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023



"நாகரிகத்தின் வேர் காடுகளதான். கூட்டங்களில் இருந்து விலகியிருந்து மரங்களுடன், ஆறுகளுடன், ஏரிகளுடன் ஒன்றாய்க் கலந்திருந்த மனிதர்களிடம் இருந்துதான் தலைசிறந்த கருத்துகள் வந்துள்ளன. காடுகளின் அமைதி மனிதனின் அறிவாற்றல் பெருக உதவியுள்ளது."

- இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)




### தெற்காசியப் பிராந்தியத்தில் வளர்ந்து வரும் பொருளாதார சக்தியைப் பயன்படுத்த

# பிராந்திய நாடுகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

தெற்காசிய பிராந்தியத்தில் வளர்ந்து வரும் பொருளாதார சக்தியைப் பயன்படுத்த பிராந்திய நாடுகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஆசியாவை நோக்கி நிகழும் பொருளாதார இடப்பெயர்வு குறித்தும் வலியுறுத்தினார்.

கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் நேற்று நடைபெற்ற YPO Colombo Experience: Rediscover the Pearl மாநாட்டில் பிரதான உரையை ஆற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தெற்காசிய பிராந்தியத்தில் புதிய பொருளாதார மாற்றத்திற்கான தனது நோக்கை முன்வைத்த ஜனாதிபதி, பிராந்திய நாடுகளுக்கு இடையில் பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்தக்கூடிய புதிய மாதிரியையும் முன்மொழிந்தார்.

மாலைதீவின் புதிய ஜனாதிபதி கலாநிதி மொஹமட் முய்சுவிற்கும் தமக்கும் இடையில் நேற்றுமுன்தினம் நடந்த இருதரப்பு பேச்சுவார்த்தைகள் குறித்தும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, இலங்கை மற்றும் மாலைதீவுடன் இணைந்து சுற்றுலா வலயமொன்றை உருவாக்குவது தொடர்பில் கலந்துரையாடியதாகவும் கூறினார்.

இலங்கையின் புதிய பொருளாதார மறுசீரமைப்புகள் குறித்தும் இதன்போது



கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, போட்டித்தன்மை கொண்ட மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம், பசுமைப் பொருளாதாரம் மேலும் வலுசக்தி மாற்றம் ஆகியவற்றை ஏற்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டினார்.

இலங்கையை, பிராந்திய பொருள்கள் பரிமாற்ற மையமாக மாற்றுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, அதிக வருமானம் ஈட்டும் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது, விவசாயத்தை நவீனமயமாக்குவது, காணி உரிமை தொடர்பான மறுசீரமைப்பு வேலைத்திட்டம் தொடர்பாகவும் கருத்துத் தெரிவித்தார்.

விவசாயத் துறையை மேம்படுத்துவதற்கான முக்கிய நடவடிக்கையாக சுமார் 2 மில்லியன் ஏக்கர் காணிகளை, அந்தக் காணிகளை வைத்திருக்கும் விவசாயிகளுக்கு முழு உரிமத்துடன் வழங்க அரசாங்கம்

(9ஆம் பக்கம் பார்க்க...)





**(8ஆம் பக்கத் தொடர்ச்சி...)**

தீர்மானித்துள்ளதாகவும் குறிப்பிட்டார். அத்துடன், பாரியளவிலான நவீன விவசாய தொழில் முயற்சிகளை உருவாக்குவதற்கு அரச மற்றும் தனியார் துறைகள் இணைந்து செயற்படுத்தவுள்ள திட்டங்கள் குறித்தும் இதன்போது ஜனாதிபதி விளக்கினார்.

செயற்கை நுண்ணறிவுக்குப் பிரவேசித்தல் உள்ளிட்ட தொழில்நுட்பத் துறையின் முன்னேற்றத்திற்காக அரசாங்கம் ஏற்கனவே நிதி ஒதுக்கீடு செய்துள்ளது என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். பாரிய பொருளாதார மத்திய நிலையத்தை உருவாக்குவதன் மூலம் தமிழ்நாடு மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் ஏற்படக்கூடிய தொழில்மயமாக்கல் குறித்தும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று, பங்களாதேஷ், மியன்மார், கம்போடியா, லாவோஸ், கிழக்கு மற்றும் மேற்கு ஆபிரிக்க பிராந்திய நாடுகளில் உள்ள புதிய முதலீட்டு வாய்ப்புகளை ஆராய்ந்து அந்த நாடுகளிலும் முதலீடு செய்ய இலங்கை தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கவும் நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார். இலங்கை, இந்தியா மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகள் கூட்டாக இணைந்து பிராந்தியத்தில் சுற்றுலாத் துறையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று பரிந்துரைத்த ஜனாதிபதி, அதற்காக நேபாளத்தையும் ஒன்றிணைக்க முடியும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும், வங்காள விரிகுடாவை சூழவுள்ள நாடுகளுக்கிடையில் சுற்றுலா வலயத்தை உருவாக்கும் திட்டம் குறித்தும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கெரீபியன் தீவுகளை விட இது மிகப் பெரிய மாற்றீடாக அமையும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பிராந்திய விரிவான பொருளாதார பங்காளித்துவத்தில் (RCEP) இணைவதற்கு இலங்கை தற்போது விண்ணப்பித்துள்ளது என்றும், இந்தியா மற்றும் பங்களாதேஷுடன் பரந்த பொருளாதார பங்காளித்துவத்தை ஏற்படுத்துவது உட்பட இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்படும் வர்த்தக பேச்சுவார்த்தைகள் மற்றும் ஒப்பந்தங்கள் குறித்தும் இளம் தொழில்முனைவோர் கவனம் செலுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பிராந்தியத்தில் உள்ள பொருளாதார ஆற்றல்கள் குறித்து நம்பிக்கையுடன் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்பார்க்கப்படும் பிராந்திய பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக தீவிரமாக பங்களிக்க வேண்டும் என்று இங்கு கூடியிருந்த இளம் தொழில்முனைவோரிடம் கேட்டுக்கொண்டார்.

YPO பிராந்திய உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## காலியில் இருவரைக் குறிவைத்து நேற்றுப் பிற்பகல் துப்பாக்கிச் சூடு

### காயங்கள் எதுவுமின்றி தப்பினர்

காலி, தடல்ல பகுதியில் நேற்று துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பிற்பகல் 1.45 மணியளவில் வீதியோர ஹோட்டல் ஒன்றுக்கு அருகே காத்திருந்த இருவர் மீது காரில் வந்த அடையாளம் தெரியாத நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு சந்தேகநபர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

எவ்வாறாயினும், சம்பவத்தின் போது எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை காலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்.

## மத்திய வங்கி நாணய சபை உறுப்பினர் பதவி விலகல்!



இலங்கை மத்திய வங்கியின் நாணய சபை உறுப்பினர் பதவியிலிருந்து ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்ஜீவ ஜயவர்தன விலகியுள்ளார்.

நிதியமைச்சு அவரது பதவி விலகலை உறுதிப்படுத்தியுள்ளது.

தற்போதைய வெற்றிடத்திற்கு ஜனாதிபதியினால் புதிய உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்படுவார் எனவும் நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

## தேங்காய் திருடிய நபர் மீது காவலாளி துப்பாக்கிச் சூடு

கந்தானை கட்டுவெல்லேகம பிரதேசத்தில் தென்னந்தோட்டம் ஒன்றில் தேங்காய் திருடிக் கொண்டிருந்த நபர் ஒருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

நேற்று தென்னந்தோட்டத்தில் தேங்காய் திருடிக் கொண்டிருந்த சந்தேகநபர் மீது குறித்த தென்னந்தோட்டக் காவலாளி துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார்.

கந்தானை பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய நபர் சம்பவத்தில் படுகாயமடைந்து நீர்கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவர் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பாதுக்க வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் மருத்துவமனையில் அனுமதி!



தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் உடல் நலக்குறைவு காரணமாக சென்னையில் உள்ள தனியார் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆனால், அவர் வழக்கமான மருத்துவ பரிசோதனைக்காக சென்றுள்ளார் என தே.மு.தி.க. தரப்பில் விளக்கம் அளிக்கப் பட்டுள்ளது.

நடிகரும், தே.மு.தி.க. தலைவரு மான விஜயகாந்த் கடந்த சில ஆண் டுகளாகவே உடல்நலப் பிரச்சினை களால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இதனால், அவர் பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதில்லை. அண்மையில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அவர் குடும்பத்துடன் இருக்கும் புகைப்படங்கள் வெளியாகின.

இந்த நிலையில், கடந்த 2 நாட்களாக நடிகர் விஜயகாந்த்துக்கு இருமல், சளி மற்றும் தொண்டை வலியால் பாதிக்கப்பட்டுள்ளார் என கூறப்படுகிறது. அதன் காரணமாக நேற்று சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சென்றுள்ளார் என தகவல் வெளியானது.

இந்தத் தகவல் பரவிய நிலையில், தே.மு.தி.க. தரப்பிலிருந்து விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சி வெளியிட் டுள்ள செய்திக் குறிப்பில், “தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் வழக்கமான மருத் துவ பரிசோதனைக்காக சென்றிருக்கிறார். ஓரிரு நாட்களில் வீடு திரும்புவார். வதந்திகளை யாரும் நம்ப வேண்டாம்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆளுநர் திருப்பி அனுப்பிய சட்டமூலங்கள் மீதான தமிழக அரசின் தனித் தீர்மானம் நிறைவேற்றம்!

தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவியால் அனுமதி வழங்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்ட 10 சட்ட மூலங்களை மீண்டும் சட்டப்பேரவையில் மறு ஆய்வு செய்து நிறைவேற்றிட வகை செய்யும் முதல்வர் ஸ்டாலின் கொண்டுவந்த அரசின் தனித் தீர்மானம் தமிழக சட்டப்பேரவையில் நேற்று ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

குரல் வாக்கெடுப்பு மூலம் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத்துடன், சட்டப்பேரவைக் கூட்டம் திகதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டது.

தமிழக ஆளுநரால் அனுமதி வழங்கப்படாமல் திருப்பி அனுப்பப் பெற்ற சட்டமூலங்களை மீண்டும் சட் டப்பேரவையில் மறு ஆய்வு செய்து நிறைவேற்றிடும் அரசினர் தனித் தீர்மானத்தை முதல்வர் ஸ்டாலின் முன் மொழிந்தார். அப்போது அவர் தனது உரையில்,

மக்களாட்சித் தத்துவத்தின் கலங் கரை விளக்கமாகத் திகழும் இந்தச் சட்டமன்றப் பேரவையில் நாம் நிறைவேற்றி அனுப்பிய சட்ட முன் வடிவுகளுக்கு ஒப்புதல் வழங்காமல் இருந்தார் ஆளுநர். தான் அனுமதியை நிறுத்திவைத்துள்ளதாகக் குறிப்பிட்டு, நாம் இங்கு நிறைவேற்றி அனுப்பிய சட்ட முன்வடிவுகளை திருப்பி அனுப்பி வைத்திருக்கின்றார். ஆளுநரால் திருப்பி அனுப்பப்பட்டுள்ள சட்டமுன்வடிவுகளை



நாம் இங்கே மீண்டும் நிறைவேற்றி, அவரது ஒப்புதலுக்காக மீண்டும் அனுப்பி வைக்க இருக்கிறோம். அதற்காகத்தான் இன்றைக்கு இந்தச் சிறப்புக் கூட்டம் கூட் டப்பட்டுள்ளது.

மக்களாட்சித் தத்துவத்தின்படி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரும் பான்மைமிக்க ஓர் அரசால், மாநில நலன் கருதி சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பப்படும் சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் தர வேண்டியது ஆளுநரின் கடமை. அவருக்கு அதில் சட்டரீதியாக அல்லது நிர்வாக ரீதியாக ஏதேனும் தெளிவுரை தேவைப்பட்டால், அதனை அவர் அரசிடம் கோரலாம். அதனை அரசு வழங்க வேண்டும். அந்த வகையில் இதற்கு முந்தைய சில நிகழ்வுகளில் அவர் எழுப்பிய சில வினாக்களுக்கு முறையாக எழுத்து மூலமாகவும், சம் மந்தப்பட்ட அரசு செயலர்கள், தலை மைச் செயலாளர் ஆகியோர் நேரிலும் விளக்கம் அளித்துள்ளனர்.

எந்த ஒரு நிகழ்விலும் அவர் கோரிய விளக்கங்கள் அவருக்கு வழங்கப்படாமல் இருந்ததில்லை. இந்தச் சூழ்நிலையில் அவர் தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளின் அடிப்படையில், சட்டமன்றப் பேரவையினால் நிறைவேற்றி அனுப்பப்பட்ட சில சட்டமுன்வடிவுகளுக்கு அனுமதி வழங்காமல் திருப்பி அனுப்பி வைத்திருப்பது என்பது தமிழ்நாட்டு மக்களையும், இந்தச் சட்டமன்றத்தையும் ஆளுநர் அவமதிக்கின்றார் என்றுதான் பொருளாகும்.

10 சட்ட முன்வடிவுகள் உள்ளிட்ட 12 சட்ட முன்வடிவுகள் மற்றும் வேறு சில கோப்புகளுக்கும் இவர் ஒப்புதல் வழங் காமல் இருப்பது சட்டவிரோதம் ஆகும். ஜனநாயக விரோதம் ஆகும்.

மக்கள் விரோதம் ஆகும். மனச்சாட்சி விரோதம் ஆகும். அனைத்திற்கும் மேலாக இந்த சட்டமன்றத்தின் இறை யாண்மைக்கு எதிரானதாகும்” என்று தெரிவித்துள்ளார்.

# பதவி இழக்கும் நிலையில் ட்ரூடோ: மக்கள் கருத்துக்கணிப்பு வெளியானது!



கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பதவியில் இருந்து விலக வேண்டும் என்ற கோரிக்கை அந்த நாட்டு மக்களிடையே வலுப்பெற்று வருகின்றது.

கனடாவில் மக்கள் சனத்தொகையில் ஐந்தில் ஒருவர் ட்ரூடோ பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கை விடுத்துள்ளனர் என கருத்துக்கணிப்பு புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

அரசியல் சூழல் தொடர்ந்து மோசமடைந்து வரும் நிலையில் அவர் தனது பதவியை இழக்க நேரிடலாம் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதனால், சொந்தக் கட்சியிலேயே எதிர்ப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், அடுத்த தேர்தல் நடைபெறும் 2025 ஆம் ஆண்டு வரை அவர் பிரதமர் பதவியில் இருப்பாரா என்பதிலேயே சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

சொந்தக் கட்சியில் எதிர்ப்பு அதிகரித்தாலும் கூட கூட்டணி ஆதரவு இருப்பதாலேயே அவரால் இப்போது அதிகாரத்தில் இருக்க முடிகிறது. இருப்பினும், பிரதமர் பதவியில் இருந்து விலகினால் அது தோல்வியை ஒப்புக் கொண்டது போல ஆகிவிடும்.

அதன்பிறகு ட்ரூடோவுக்கு அரசியல் எதிர்காலமே இருக்காது என்பதால் அவர் பதவி விலக மறுத்து வருகிறார் என தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு விலைவாசி அதிகரிப்பு, வீட்டு வாடகை அதிகரிப்பு, பணவீக்கமும் மோசமான நிலையை அடைந்துள்ள நிலையில் மக்கள் அவர் மீது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர்.

அத்துடன் காலிஸ்தான் முக்கியஸ்தர் கொலை விவகாரத்தில் இந்தியாவை குற்றஞ்சாட்டியுள்ளதால் சர்வதேச அளவில் அவர் சர்ச்சையில் சிக்கி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# காஸாவில் போரினால் பலியானோர் எண்ணிக்கை 12 ஆயிரத்தை கடந்தது



பாலஸ்தீன ஆதரவு பெற்ற காஸாவிற்கும் இஸ்ரேலுக்கும் இடையே தொடர்ந்து 43 ஆவது நாளாக போர் நடைபெற்று வருகிறது.

காஸாவில் வான் வழி, கடல் வழி தாக்குதல்களைத் தொடர்ந்து தற்போது தரை வழித் தாக்குதலை இஸ்ரேல் இராணுவம் நடத்தி வருகிறது.

இந்த நிலையில், காஸாவில் போரினால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 12 ஆயிரத்தை கடந்துள்ளது.

ஒக்டோபர் 7 ஆம் திகதி முதல் இதுவரையில் இந்த உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன என காஸாவின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவற்றில் 5000 குழந்தைகள் உள்ளடங்குகின்றனர் என கணக்கிடப்பட்டுள்ளது. மேலும், காஸாவில் 1,800 குழந்தைகள் உட்பட 3 ஆயிரத்து 570 இற்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த நிலையில், காஸாவின் அல்–ஷிஃபா மருத்துவமனையை மூன்றாவது நாளாக இஸ்ரேல் இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளனர்.

மருத்துவமனை வளாகத்தில் ஹமாஸ் படையினரை தேடும் பணிகளில் இஸ்ரேல் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த மருத்துமனையில் மின் துண்டிப்பு காரணமாக 40 நோயாளிகள் உயிரிழந்துள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் இரண்டு சிறுவர்களும் உள்ளடங்குகின்றனர் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், ஒக்ஸிஜன் மற்றும் நீர் தட்டுப்பாட்டினால் சுமார் 7 ஆயிரம் நோயாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என மருத்துவமனை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், காஸாவிற்கு எரிபொருள் விநியோகிக்க இஸ்ரேல் இணங்கியுள்ளதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா விடுத்த கோரிக்கைக்கு இணங்க, இரண்டு நாட்களுக்கு ஒரு முறை காஸாவிற்கு எரிபொருள் வழங்க இஸ்ரேல் தீர்மானித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த ஒப்பந்தத்தின்படி, முதல் தொகுதியாக 17 ஆயிரம் லிட்டர் எரிபொருளை காஸாவிற்குள் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இஸ்ரேல் – ஹமாஸ் போரில் பொதுமக்கள் கொல்லப்படுவது அதிகரித்துள்ளமைக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி கண்டனம் தெரிவித்துள்ளார்.

போர் குறித்த பேச்சுவார்த்தை மற்றும் இராஜதந்திர செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாலஸ்தீன மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை அனுப்பியுள்ளதாகவும் இந்திய பிரதமர் தெரிவித்துள்ளார்.

உலகளாவிய நலனுக்காக தெற்குலக நாடுகள் ஒன்றுபட வேண்டிய நேரம் இதுவென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



# சோபை இழக்கின்றது சங்குப்பிட்டிப் பாலம்!

- த.சுபேசன் -

பல கோடி ரூபா செலவில் அரசினால் அமைக்கப்பட்ட பூநகரி – சங்குப்பிட்டிப் பாலத்தில் சில மாதங்களாக இரவு வேளையில் மின்விளக்குகள் ஒளிராமையால் பாலம் இருளில் மூழ்கிக் காணப்படுவதாக பொதுமக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இது தொடர்பாக பொதுமக்கள் தெரிவிப்பவை வருமாறு:-

நூற்றுக்கணக்கான சூரியப்படல மின்கலங்களினூடாக தன்னியக்கமாகவே இரவு வேளையில் ஒளிரக் கூடியதான மின்விளக்குகள் பொருத்தப்பட்டு, அழகுறக் காணப்பட்ட பூநகரி – சங்குப்பிட்டி பாலம் சில மாதங்களாக கவனிப்பாரற்ற நிலையில் ஒளியிழந்து இருளில் மூழ்கியுள்ளது.

பாலம் மாலை வேளைகளில் அழகுற இருந்தபோது உள்ளூர், வெளியூர் சுற்றுலாவிகள் அதிகமாக சஞ்சரித்து வந்தனர்.

தற்போது அவர்களின் வரவும் குறைந்துள்ளது. பாலமும் துருப்பிடித்தும், காப்பெற கழன்று பழுதடைந்தும் காணப்படுகின்றது. அத்துடன் பூநகரியிலிருந்து தனங்கிளப்பு வரையான ஏ32வீதியின் காப்பெற்றும் சேதமடைந்து விபத்துக்கள் ஏற்பட ஏது நிலையில் காணப்படுவதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.



# முல்லைத்தீவுக்குத் தெற்கே உருவான காற்றுச் சுழற்சியால் மழை தொடரும்!

இலங்கையின் முல்லைத்தீவுக்கு தெற்காகக் காற்று சுழற்சி ஒன்று உருவாகியுள்ளது என யாழ் பல்கலைக் கழகத்தின் புவியியற்துறை முதுநிலை விரிவுரையாளரான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார்.

தற்போதைய வானிலை மாற்றம் தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

வட கிழக்கில் நேற்றுத் தொடக்கம் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை மழை பெய்யும் வாய்ப்பு இருப்பதாக வானிலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சீரற்ற காலநிலையினால் தொடர்ச்சியாக மழை கிடைக்கப்பெற்று வருகின்றது. இம்மழை இன்னும் சில தினங்களுக்கு தொடர்ச்சியாக இருக்கும் என வானிலை ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றைய தினம் சனிக்கிழமை காலை 7 மணியளவில் இலங்கையின் முல்லைத்தீவுக்கு தெற்காகக் காற்று சுழற்சி ஒன்று உருவாகியுள்ளது.

இதன் காரணமாக நேற்று முதல் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளதாக மேலும் அவர் தெரிவித்துள்ளார்.



# கோட்டாவுக்கு ஆதரவளித்த சகலருக்கும் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புப் பொருந்தும்

## லக்ஷ்மன் கிரியெல்ல நாடாளுமன்றத்தில் விளக்கம்



உயர்நீதிமன்ற தீர்ப்பு கோட்டா பய ராஜபக்ஷவுக்கு ஆதரவளித்த அனைவருக்கும் பொருந்தும் என எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் –

“தேர்தல் பிரசாரத்துக்கு உதவி செய்தால் பதவிக்கு வந்ததுடன் வரிகளை குறைத்து நிவாரணம் வழங்குவார் எனக் கோட்டாபய ராஜபக்ஷ பெரிய வியாபார நிறுவனங்களுக்கு வாக்குறுதி வழங்கியிருந்தார்.

அதன் பிரகாரமே, அது வரையில் நாட்டுக்குக் கிடைத்துவந்த வரி வருமானத்தை குறைப்பதற்கு அவர் தீர்மானித்தார். கோட்டாபய ராஜபக்ஷ தேர்தலுக்கு முன்னர் சங்கிரில்லா ஹோட்டலில் பெரும் வியாபாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே இந்த வாக்குறுதியை வழங்கியிருந்தார்.

அதன்போது நாட்டில் இருக்கும் பெரும் வியாபாரி ஒருவர் நூறு கோடி ரூபா வழங்கினார். இந்த விடயங்களை நாங்கள் இந்தச் சபையில் ஆரம்பத்திலேயே தெரிவித்திருந்தோம்.

அந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததுடன் வரிக் குறைப்பை மேற்கொண்டதாலேயேவ்நாட்டுக்கு இந்த நிலை ஏற்பட்டது.

வரிக் குறைப்பு செய்து, நாட்டுக்கு கிடைத்து வந்த வருமானத்தை இல்லாமல் செய்ததாலேயே நாடு வங்குரோத்து நிலையை அடைந்தது.

வரியைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்போது அதற்கு ஆளும் கட்சி உறுப்பினர்கள் எவரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

அதனால் இந்த நாடு வங்குரோத்து அடைந்தமைக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள் என நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு அரசாங்கத்தில் இருக்கும் ஏனையவர்களுக்கும் பொருந்தும்.

அத்துடன் பொருளாதார கொலைகாரர்கள் தொடர்பாக நீதிமன்றம் தீர்ப்பு வழங்க முன்னர் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவை இதனைத் தெரிவித்திருந்தது.

பொருளாதார நெருக்கடிக்கு இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும் என மனித உரிமை பேரவை கடந்த கூட்டத்தின்போது தெரிவித்திருந்தது.

உயர் நீதிமன்றம் தற்போது வழங்கி இருக்கும் தீர்ப்பு வரலாற்று முக்கியமானதாகும். ஆட்சியாளர்கள் அநீதியான முறையில் பணம் சம்பாதித்திருந்தால், அது தொடர்பில் தேடிப் பார்க்கத் தயாராக இருக்கிறது என்ற செய்தியை இதன் மூலம் உயர் நீதிமன்றம் தெரிவித்திருக்கிறது.

எனவே வரிக் குறைப்புக்கு கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவளித்தவர்களுக்கு என்ன தண்டனை வழங்க முடியும் என எனக்கு தெரிவிக்க முடியாது. ஆனால் இவர்கள் அனைவரும் களனி விகாரைக்கு சென்று பாவமன்னிப்பு கோர வேண்டும்.

அத்துடன் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள பாரியளவிலான முதலீகள் நாட்டுக்குள் மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு இல்லாமல் இன்னும் 10 வருடங்களுக்காவது இந்த பிரச்சினை தொடரும்.” எனத் தெரிவித்தார்.



# பொலிஸ்மா அதிபருக்குச் சேவை நீடிப்பு: அரசமைப்புப் பேரவைக்குள் முரண்பாடு!

பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரம ரத்னவுக்குச் சேவை நீடிப்பு வழங்கும் விவகாரத்தில் அரசமைப்பு பேரவைக்குள் பல்வேறு முரண்பாடுகள் எழுந்துள்ளன என்று தெரியவருகின்றது.

இந்த விவகாரத்தில் அரசமைப்புப் பேரவை இரண்டாகப் பிளவுபட்டுள்ளது. பேரவையின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் சி.டி.விக்கிரமரத்னவை மீண்டும் மீண்டும் அரசமைப்புப் பேரவையின் ஒப்புதலின்றி பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்படுவதற்குக் கடும் எதிர்ப்புகள் வெளியிடப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ/க்கும் இடையிலும் பல்வேறு கருத்து முரண்பாடுகள் இந்த விடயத்தில் தோன்றியுள்ளன.

அதன் காரணமாகவே இந்த வருடம் மார்ச் மாதம் முதல் புதிய பொலிஸ்மா அதிபர் ஒருவர் நியமிக்கப்பட வில்லை.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக் கோனை புதிய பொலிஸ்மா அதிபராக நியமிக்க அமைச்சர் டிரான் அலஸ் ஜனாதிபதியிடம் பல சந்தர்ப்பங்களில் கோரிக்கை விடுத்துள்ளார் எனவும், அதனை ஜனாதிபதி நிராகரித்துள்ளார் எனவும் தெரியவருகின்றது.

சி.டி.விக்கிரமரத்ன பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர் நான்கு முறை அவருக்குச் சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. கடந்த நவம்பர் 3ஆம் திகதி மூன்று வாரங்களுக்குக் கடைசியாக அவருக்குச் சேவை நீட்டிப்பு வழங்கப்பட்டது.

எவ்வாறாயினும், நேற்றுக் கூடிய அரசமைப்புப் பேரவையால் ஜனாதிபதியால் வழங்கப்பட்ட சேவை நீடிப்புக்கு அங்கீகாரம் வழங்குவதற்கு ஒருமித்த கருத்தை எட்ட முடியவில்லை.

மூன்று சிவில் சமூக உறுப்பினர்களும், இன்னும் சிலர் சேவை நீடிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இதன் விளைவாக, இறுதி முடிவு எடுக்க இரண்டாவது முறையாக இன்று பேரவை கூடியுள்ளது.

மேலும், ஜனாதிபதியால் வழங்கப்பட்ட சேவை நீடிப்பு அரசமைமைப்புப் பேரவையின் ஒப்புதல் இல்லாமல் செல்லுபடியாகுமா அல்லது அரசமைப்பின் அடிப்படையில் செல்லுபடியாகுமா என்பதில் சட்டத் தெளிவில்லாத சூழலும் காணப்படுகின்றது.

அரசமைப்புப் பேரவை பத்து உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பாகும். சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன, பிரதமர் தினேஷ் குணவர்த்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம், நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம், கலாநிதி பிரதாப் ராமானுஜம், கலாநிதி தில்குஷி அனுலா விஜேசுந்தரே, கலாநிதி தினேஷா சமரரத்ன ஆகியோர் இதன் உறுப்பினர்களாவர். ஒரு உறுப்பினருக்கான பதவி இன்னமும் வெற்றிடமாக உள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

# கொழும்பில் கன மழையால் பல பகுதிகள் வெள்ளத்தில்


நாட்டின் பல பகுதிகளிலும் கன மழை பெய்து வருகிறது. நேற்றைய மழையினால் கொழும்பில் பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.


ஆமர் வீதி, தும்முல்லை சந்தி, ஹைய்வெவல் வீதியில் கிருலப்பனை ஆகிய பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அந்த வீதிகளில் வாகன நெரிசலும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



# மனிதனும் தெய்வமாகலாம்!





**நீங்கள் எப்போது என்னுடைய அறிவுறைகளைக் கடைபிடிக்க உறுதி கொள்கிறீர்களோ, எனது வழிபாடுகளை பின் பற்றுகிறீர்களோ, எனது கட்டளைகளை சேவையாக மாற்றுகிறீர்களோ, சாதனையில் ஈடுபடுகிறீர்களோ அந்த நாள் தான் உங்களுக்கு எனது பிறந்த தினம்.**

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 98 ஆவது பிறந்ததினம் கொண்டாடப் படுகிறது. 1975 ஆண்டு பகவானின் பிறந்தநாளில், பாபா கூறிய ஒரு தகவல் இது. “நான் எந்த ஒரு குறிப்பிட்ட தினத்தையும் என்னுடைய பிறந்த தினமாகக் கருதவில்லை. ஏனென்றால் எப்போது உங்கள் இதயத்தில் இறை தன்மை மலர்கிறதோ அன்றுதான் உங்களுக்குள் நான் பிறந்த தினம். ஆகையால் நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுக்குள் இறைத்தன்மை மலர்ந்த அந்த நாளைத்தான், என்னுடைய பிறந்ததினமாகக் கொண்டாட வேண்டும்.

நீங்கள் எப்போது என்னுடைய அறிவுறைகளைக் கடைபிடிக்க உறுதி கொள்கிறீர்களோ, எனது வழிபாடுகளை பின் பற்றுகிறீர்களோ, எனது கட்டளைகளை சேவையாக மாற்றுகிறீர்களோ, சாதனையில் ஈடுபடுகிறீர்களோ அந்த நாள் தான் உங்களுக்கு எனது பிறந்த தினம்.

நான் பிறந்த தினம் என்று நீங்கள் கௌரவப்படுத்தும் நாள் 23 அன்று வழக்கமான சடங்குகளுடன் கொண்டாடினாலும் அந்த நாளும் மற்ற நாள்களைப் போல ஒரு சாதாரண நாளாகவே விளங்கும். மனிதரை மதித்து வணங்குங்கள். அது என்னை வந்தடையும். மனிதரைப் புறக்கணிப்பது என்னைப் புறக்கணிப்பதாகும். மனிதரை ஒதுக்கிவைத்து, இறைவனை வணங்குவதால் என்ன பயன்? இறைவன் மீதான பிரேமை, மனிதன் மேலான பிரேமையாக வெளிப்பட வேண்டும். அதாவது அப்பிரேமையானது சேவையாகப் பரிணமிக்க வேண்டும். பிரேமையின் மூலம் மட்டுமே ஒவ்வொரு தனி மனிதனுக்கும் நாட்டுக்கும் சாந்தி கிடைக்கும்.

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவும், மகான் சீரடி சாயி பாபாவும் எந்த ஒரு புதிய மதத்தை நிறுவவோ, போதிக்கவோ முயற்சி செய்யவில்லை. உலகிலுள்ள அனைத்து மதங்களையும் அனுசரித்து “தெய்வம் ஒன்றே” “அன்பே இறைவன்” என்ற அடிப்படையில் சாயி இயக்கத்தை தோற்றிவித்துள்ளார்.

சீரடி சாயி பாபாவும், சத்ய சாயி பாபாவும் ஒருவரே! சீரடி சாயி பாபா அருள்வாக்கின்படி 8 வருடங்கள் கழித்து சத்ய சாயி பாபா அவதரித்தார். சத்ய சாயி பாபாவின் அறிமுகத்துடன் தான் இலங்கையில் சாயி பக்தர்களுக்கு சீரடி சாயி பாபாவின் அருள் கிட்டியது. ஏன்? சீரடி சாயி பாபாவின் பிறப்பின் ரகசியத்தை வெளிப்படுத்தியவரும் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாதான். இந்த வருடம் பகவான் சத்ய சாயி பாபாவின் 98 ஆவது பிறந்ததினம் குரு வாரமாகிய வியாழக்கிழமையில் வருவதால், அவரது பிறந்த தினத்தை கொழும்பு புதுச் செட்டித் தெருவிலுள்ள ஸ்ரீ சத்ய சாயி மத்திய நிலையம் நவம்பர் 23 ஆம் திகதி வியாழக்கிழமை இரண்டு சற்குருக்களாகிய சீரடி– சத்ய சாயிகளின் வழிபாட்டு நாளாகிய குருவாரத்தில் கொண்டாடவிருக்கிறது.

அன்று காலையில் பிரசாந்திக் கொடி ஏற்றி அன்னதான நிகழ்வுகளுடன் முழு நாள் நிகழ்ச்சிகளாக திருவுஞ்சல், பிறந்த நாள் கேக் வெட்டுதல், சாயி பூஜை பஜன் மற்றும் சீரடிசாயி பாபாவின் நான்கு கால ஆராத்திகளுடன் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

முதல் நாள் நவ 22 ஆம் திகதி புதன் கிழமை மாலை புட்டபர்த்தியில் பாபாவின் சமாதியில் வைத்து பூஜீத்து எடுத்து வரப்பட்ட பாபாவின் திருவுருத்துக்கு நவதிரவிய அபீஷேகம் செய்யப்பட்டு சித்திரத்தேர் பவனி இடம்பெறவுள்ளது.

உலகிலேயே சத்ய சாயி பாபாவின் சித்திரத்தேரோட்டம் நடைபெறும இடம் கொழும்பு சாயி நிலையம் மட்டுமே!

**எஸ்.டி.எஸ். உதயநாயகம்,**
**பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்தியநிலையம், கொழும்பு.**

# சிவனொளிபாத மலைக்குச் செல்லும் பாதையில் குளவிக் கூடுகளால் பீதி!

## பௌத்த விகாரையின் புத்தர் சிலையிலும் கட்டியுள்ளன



(மஸ்கெலியா நிருபர் செ.தி.பெருமாள்)

நல்லதண்ணி நகரில் உள்ள நாக தீப விகாரையில் அமைத்து இருக்கும் உயரமான புத்தர் சிலையில் சுமார் 12 க்கு மேற்பட்ட (தேன்) குளவிக் கூடுகள் உள்ளன.

இவை சிவனொளிபாத மலைக் குச் செல்லும் பிரதான சாலையில் உள்ளமையால் இந்தச் சாலை வழியாக சிவனொளிபாத மலைக்குத் தரிசனம் செய்ய செல்லும் பக்தர்கள் மற்றும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் எந்த நேரத்திலும் கொட்டுக்கு இலக்காகும் நிலை உள்ளது.

தற்போதும் இப்பகுதியில் காலை வேளையில் கடும் உஷ்ணமும், மாலை வேளையில் கடும் காற்றுடன் மழையும் நீடிப்பதால் கூடுகளில் உள்ள குளவி கள் கலைந்து ஆபத்து நேரும் சூழல் காணப்படுகின்றது. இந்தக் கூடுகளை நல்லதண்ணி வன பாதுகாப்பு அதி காரிகள் அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அத்துடன் நல்லதண்ணி நகரில் இருந்து சிவனொளிபாத மலைக்குச் செல்லும் பிரதான சாலையின் அருகில் பல பாரிய மரங்களிலும் இவ்வாறு குளவிக் கூடுகள் நிறைய உள்ளன.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி முதல் சிவனொளிபாத மலை தரிசனத்துக்கான பருவகாலம் ஆரம்பமாவதால் இவ்வாறு உள்ள அனைத்துக் குளவி கூடுகளையும். விரைந்து அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரப்படுகின்றது.

# அன்று தென்னிலங்கையுடன் தேன்நிலவு இன்று தீர்வு தராதென சுயலாபக் கூச்சல்

## நாடாளுமன்றில் அமைச்சர் டக்ளஸ் காய்ச்சல்

வளர்ச்சியடைந்த நாடுகள் மட்டு மன்றி வல்லரசு நாடுகளும் கூட பொரு ளாதார வீழ்ச்சி கண்ட வேளை வளர்ந்து வரும் நாடாகிய இலங்கைத் தீவை தன் ஆளுமையால் தற்காத்தவர் ஜனாதி பதிபதி ரணில் விக்ரமசிங்க என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலா ளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சர மான டக்ளஸ் தேவானந்தா சுட்டிக் காட்டியுள்ளார்.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் தொடர்பில் நாடாளு மன்றில் தனது கருத்துக்களை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

தென்னிலங்கை எமக்கு தீர்வு வழங்காதென்று சுயலாபக் கூச்சலிடு வோர் இதே ஆளுமை மிக்க ரணில் விக்கிரமசிங்க அவர்களுடன் நான் காண்டுகள் தேன் நிலவு கொண்டாடி மகிழ்ந்தனர்.

எதை அவர்கள் சாதித்தனர்? இதற்கு நீங்கள் ஆயிரம் வியாக்கியானங்கள் கொடுத்தாலும் போதிய அரசியல் பலத் தோடு இருந்தும் நீங்கள் மாபெரும் வரலாற்று தவறு விட்டமையை அது பதிவு செய்துள்ளது. 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்கு முன்னர் தமது உதடுகளுக்கு தாமே சீல் வைத்துக் கொண்டவர்கள் இவர்கள்.

இன்று அரசாங்கம் நல்லிணக்கத் திற்கு சீல் வைத்திருக்கிறது என்று சுதந்திரமாக பேசுகிறார்கள். நல்ல மாற்றம். வரவேற்கிறேன்.

சமாதானத்திற்கான கதவுகளை



அரசாங்கம் இறுக மூடியிருப்பதாக சொல்கிறார்கள்.

பாவம் அவர்கள் கண்ணிருந்தும் குருடர்கள். செவியிருந்நதும் செவி டர்கள். கண்ணிழந்த மனிதர் முன்னே ஓவியம் வைத்தார். செவியிழந்த மனிதர் முன்னே பாடலிசைத்தார். எத்தனை வாய்ப்புகள் கிடைத்தும் அத்தனையும் பன்றிக்கு முன்னால் வீசப்பட்ட முத் தாகப் போய் விட்டன.

இலங்கை இந்திய ஒப்பந்தம். இதை ஏற்றுக்கொண்ட ஒரு கட்சியின் காலில் விழுந்து, இடுப்பைப் பிடித்து, மெல்ல எழுந்து, கழுத்தை நெரிக்கும் அந்த வாத்தியார் இலங்கை – இந்த-ிய ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்ட ஒரு வராகவே பார்க்கப்படுகிறார்.

தென்னிலங்கை இறுகப் பூட்டி வைத் திருக்காம். ஒப்புக்கொள்ளலாம்.அது இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு முந்திய வரலாறு.

சந்திரிகா அம்மையார் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை விட பல மடங்கு முன்னேற்றகரமான தீர்வை முன் வைத்த போது இந்த வாத்தியார் இன்று தொத்தி ஏறியிருக்கும் கட்சி அன்று அதை எதிர்த்து கொழும்பில் ஊர்வலம் போனது. எந்த அடிப்படையில் போனீர்கள்?

அப்போது இந்த வாத்தியார் தன் கண்களுக்கும் காதுகளுக்கும் சீல் வைத்துக்கொண்டிருந்தாரா? அல்லது கட்டாயப் பயிற்சியில் விறகுக்கட்டை ஏந்திக்கொண்டிருந்தாரா? ஜனாதிபதி அவர்கள் மக்களுடன் பேசி பிரச்சினை ளைத் தீர்க்கத் தயாராக இருக்கின்றார். ஆகையால் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

எனவே, இந்த நாட்டை மீளக் கட்டி யெழுப்ப வேண்டிய வழிமுறைகை-யும், எமது நாட்டு மக்களின் வாழ்க்கை நிலையையும் பேணிப் பாதுகாக்க வேண்டிய வழிமுறைகளையும் நன்கு அறிந்தவரும் அவரேயாவார்.

அந்த வகையில்தான் 2024ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட் டத்தை அவர் முன்வைத்திருக்கின்றார் என்பதை நான் இங்கு கூறியே ஆக வேண்டும்.

எமது நாடு எத்தகைய பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீண்டு வருகின்றது என்பதை யாரும் மறந்துவிடவோ, மறுத்து விடவோ முடியாது. இந்த நாடு, சூழ்ச்சி கரமான இக்கட்டு நிலைக்குத் தள்ளப் பட்டிருந்த காலகட்டத்தில், இந்த நாட்டைப் பொறுப்பேற்க எவருமே முன்வராத நிலையில், தைரியமாக முன்வந்து இந்த நாட்டைப் பொறுப்பேற்ற ஒரே யொரு தலைவர் எமது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான்.- என்றார்.

# இன்றைய ராசி பலன்கள் - 19.11.2023




இன்று நம்பிக்கை உணர்வு நிறைந்து காணப்படும். இதனால் உங்கள் இலக்கு களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். புதிய தொடர்புகள் கிட்டும். நட்பு வட்டாரம் விரி வடையும்.

பணியைப் பொறுத்தவரை நல்ல வளர்ச்சி காணப்படு கின்றது. உங்கள் செயல்திறன் கண்டு சக பணியாளர்கள் பொறாமைப்படுவார்கள். பல புதிய வேலை வாய்ப்புகள் காணப்படும். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் சமநிலை அணுகுமுறை காணப்படும். உங்கள் துணையும் உங்கள் அன்பான உணர்வுகளுக்கு பதில் அன்பு செலுத்துவார்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிப்பதற்கான வாய்ப்பும் அதிகம்.

இன்று நீங்கள் மிகவும் ஆற்றலுடன் காணப்படுவீர் கள்.




உங்கள் முயற்சிகளில் வெற்றி காண நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். தன்னம்பிக்கை வளர்த்துக் கொள்வது உங்களு உதவியாக இருக்கும். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களின் நன்மதிப்பை பெற தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.கடினமான சூழ்நிலையை சமாளிக்க பிரார்த்தனை மேற்கொள்ள வேண்டும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்து வீர்கள். உங்கள் செயல்திறனுக்கான மதிப்பு பெறு வீர்கள். அங்கீகாரத்தை பெற்று மகிழ்வீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் வெளிப்படையாகப் பழகுவீர்கள். இந்தப் போக்கின் காரணமாக மகிழ்ச்சியைப் பராமரிக்க இயலும்.

நிதி வளர்ச்சிக்கான சாத்தியம் உள்ளது. உங்கள் வங்கியிருப்பை உருவாகும் வாய்ப்பு உள்ளது.




இன்று உங்களுக்கு சாதகமான நாள் அல்ல. இன்று மன அமைதியுடனும் மகிழ்ச்சியுடனும் இருப்பது நல்லது. அனுசரித்து விவேகத்துடன் நடந்து கொள்வது நன்மை அளிக்கும்.

உங்கள் பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. திறமையாக பணியாற்ற கவனம் அவசியம்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சி யை பகிர்ந்து கொள்ள இயலாது. உங்களின் அகந்தைப் போக்கு தடையாக இருக்கும். உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை உருவாக்க முயலுங்கள்.

நிதி நிலைமையில் இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்காது. இன்று அதிக செலவுகள் காணப்படும். இதனால் ஆதிருப்தி காணப்படும்.

பதட்டம் மற்றும் பாதுகாப்பின்மை உங்கள் ஆரோக் கியத்தை பாதிக்கும்.




இன்று துடிப்பான நாளாக இருக்கும். உங்கள் இலக்குகளை எளிதாக அடைவ தில் வெற்றி காண்பீர்கள். மனதில் புத் துணர்ச்சி காரணமாக துடிப்புடன் இருப் பீர்கள். இதனால் சரியான முடிவெடுப் பீர்கள். அது உங்களுக்கு பயனுள்ள தாக இருக்கும்.

பணியிடத்தில் சிறப்பாக செயல்படுவீர்கள். வளர்ச்சிக் கான வாய்ப்புகள் அதிகம். அதனை நன்கு பயன்படுத் திக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வை புரிந்து கொள்வீர்கள். இதனால் உறவில் நம்பிக்கையும் அன்பும் ஏற்படும்.

போதிய அளவு பணம் காணப்படும். பணம் சேமிப் பதற்கான வாய்ப்பும் அதிகம்.

உங்களிடம் காணப்படும் தன்னம்பிக்கை காரணமாக இன்று உங்களிடம் சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் வளர்ச்சியை மேம்படுத்தும் இலக்குகளை அடைவீர்கள். முயற்சி யின்றி உங்கள் புத்திசாலித்தனம் மூலம் வெற்றி கிடைக்கும்.

பணியில் திருப்தி காணப்படும். உங்கள் பணிகளை நீங்கள் தரமாக மேற்கொள்வீர் கள். இதனால் உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பை பராமரிப்பீர்கள். சுமூகமான சூழ்நிலை காரணமாக மகிழ்ச்சியான தருணங்கள் காணப்படும்.

இன்று பண வரவு அதிகமாக இருக்கும். இன்று சேமிக்கும் பழக்கத்தை வளர்ப்பதன் மூலம் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பதட்டம் காணப்படுவதால் சாதகமான நாளாக இருக்காது. நீங்கள் உற்சாகமாக இருந்து சூழ் சவால்களை சந்திக்க வேண்டும். மற்றவரை மகிழ்ச்சிப் படுத்த வேண்டும். பிரார்த்தனை மற்றும் வழிபாடு மூலம் அமைதி பெறலாம்.

அதிகப் பணிகள் காரணமாக பணியிடத்தில் திருப்தி யின்மை காணப்படும். உங்கள் மேலதிகாரிகளிடம் நல்லுறவு காணப்படாது.

உங்கள் துணையிடம் அதிருப்தி காண்பீர்கள். இதனால் இருவரிடையே மகிழ்ச்சி நிலை குறைந்து காணப்படும்.

நிதி வளர்ச்சி இன்று காணப்படாது. உங்கள் நிதியைப் பொறுத்த முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல. புத்திசாலித்தனத் துடன் பொறுமையாக விஷயங்களை கையாள்வதன் மூலம் நன்மை விளை யும்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். கவனக்குறைவு காரணமாக உங்கள் பணிகளை மேற்கொள்வதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்வதில் சிக் கல் காணப்படும். அது உங்களுக்கு கவலை அளிக்கும். உங்கள் துணையை நன்கு புரிந்துகொள்ள தவறுவீர்கள்.

பணப்புழக்கம் போதிய அளவு இருக்காது. செலவுகள் அதிகமாக இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது.தொடை களில் வலி உணர்வீர்கள்.




உங்களின் வளர்ச்சி குறித்த முயற்சி யில் வெற்றி கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. இன்று உங்களிடம் ஆற்றலும் உற்சாகமும் நிறைந்திருக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

பணியிடத்தில் உங்கள் முயற்சி காரணமாக வெற்றி காண்பீர்கள். கடினமான பணி களையும் எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். நீங்கள் புதிய முதலீடுகளுக்கு திட்டமிடலாம்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 19.11.2023




இன்று அதிர்ஷ்டம் குறைவான நாள். இன்று நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். இதனால் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும்.நல்ல பலன் காண உங்கள் செயல்களை முன்கூட்டியே திட்டமிட வேண்டும்.

பணியைப் பொறுத்த அதிக சவால்களை நீங்கள் சந்திக்க நேரலாம். அதிகப் பணிகள் காரணமாக நீங்கள் சிறப்பாக திட்டமிடுவதன் மூலம் வெற்றி காணலாம்.

நீங்கள் எதிர் கொள்ளும் குடும்ப பிரச்சினையால் பாதிப்பை உணரலாம். இந்த நிலையின் காரணமாக நல்லுறவை பராமரிப்பது கடினமாக இருக்கும்.

பண வரவிற்கான சாத்தியம் குறைவு. இன்று வீட்டு புனரமைப்பு தொடர்பாக கூடுதல் செலவுகளை சந்திக்க நேரலாம்.




சில துன்பமான சூழல் காரணமாக பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். விவேகத்துடன் இந்தச் சவால்களை நீங்கள் சந்திக்க வேண்டும். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதல் அளிக்கும்.

பணியில் திருப்தி குறைந்து காணப்படும். நீங்கள் உறுதியுடனும் சிறப்பாக திட்டமிடுவதன் மூலமும் தடைகளை சமாளிக்க இயலும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை வெளிப்படுத்துவீர்கள். இத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது. இருவரும் திருப்தியாக இருக்க பரஸ்பரம் கலந்தாலோசிக்க வேண்டும்.

உங்கள் தந்தையின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம். எனவே போதிய அளவு சேமிப்பது கடினமாக இருக்கும்.




இன்று விரும்பும் பலன் காண சாதக மான நாள் அல்ல. பாதகமான விளைவுகள் ஏற்படாமல் இருக்க எந்த செயலையும் தொடங்குமுன் யோசித்து செயல்பட வேண்டும். இசை கேட்டல் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

கவனக்குறைவு காரணமாக பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது. எனவே பணிகளை மேற்கொள்ளும்போது கவனமாக பணியாற்ற வேண்டும்.

உங்கள துணையுடன் விரும்பத்தகாத சூழ்நிலை காணப்படும். நீங்கள் இன்று மிகவும் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவின் மகிழ்ச்சி பாதிக்கும்.

இன்று வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும். பண இழப்பு ஏற்படாமல் இருக்க செலவைக் குறைத்து சிக்கன நடவடிக்க மேற்கொள்ளவும்.




சுய முயற்சி மூலம் முன்னேறுவதற்கான வாய்ப்பு இன்று உள்ளது. வெற்றி காண்பதற்கு உறுதியான அணுகுமுறை உதவிகரமாக இருக்கும். உங்கள் இனிமையான வார்த்தைகள் நல்ல பலன்களை அளிக்கும்.

பணி வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.நீங்கள்பணியில் சிறப்பாக வெற்றி காண திட்டமிட்ட அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் நீங்கள் உண்மையாக அன்பான உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். இதனால் உங்கள் துணை மிகவும் மகிழ்ச்சியடைவார்.

பண வரவு இன்று மகிழ்ச்சிகரமாக இருக்கும். புதிய சேமிப்பு பழக்கம் மேற்கொள்ள நல்ல வாய்ப்பு கிடைக்கும். இதனால் பொருளாதார பாதுகாப்பு காணப்படும்.



Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park




## உலக சம்பியன் யார் என்பதைத் தீர்மானிக்கும்


# பிரமாண்ட இறுதியாட்டம் இன்று

### தாய் மண்ணில் கிண்ணத்தை வெல்லுமா இந்தியா?

### வழமைபோல் ‘அசால்’டாக தட்டித் தூக்குமா ஆஸி?

### இந்தியப் பிரதமர், அவுஸ்திரேலிய துணைப் பிரதமர் பங்கேற்பு

### ரசிகர்களைக் குஷிப்படுத்த கண்கவர் நிகழ்வுகள்



உலக சம்பியன் யார் என்பதைத் தீர்மானிக்கும் இறுதிப்போட்டி இன்று இந்தியாவில் நடைபெற உள்ளது.

10 அணிகள் கலந்து கொண்ட உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகின்றது.

இந்தத் தொடரின் லீக் சுற்று ஆட்டங்களின் முடிவில் இந்தியா, தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து அணிகள் அரையிறுதிக்கு முன்னேறின.

(20ஆம் பக்கம் பார்க்க...)

# பிரமாண்ட இறுதியாட்டம் இன்று

(19ஆம் பக்கம் பார்க்க...)

அரையிறுதி ஆட்டங்களில் இந்திய அணி நியூஸிலாந்தையும், அவுஸ்திரேலிய அணி தென்னாபிரிக்காவையும் வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறின.

இந்நிலையில் புதிய உலக சம்பியன் யார் என்பதைத் தீர்மானிக்கும் தொடரின் இறுதிப்போட்டி இன்று நடைபெற உள்ளது.

இந்த ஆட்டம் அஹமதாபாத்தில் உள்ள உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் மைதானமான நரேந்திர மோடி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்று நடைபெறும் இறுதி ஆட்டத்தில் இந்திய அணி, அவுஸ்திரேலியாவை வீழ்த்தி 3ஆவது முறையாக சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றும் முனைப்புடன் உள்ளது.

அதேவேளை, தனது 6ஆவது சம்பியன் பட்டத்தை வெல்லும் முனைப்புடன் அவுஸ்திரேலிய அணி ஆடவுள்ளது.

இதனால், ஆட்டத்தில் பரபரப்புக்கு பஞ்சம் இருக்காது. இலங்கை - இந்திய நேரப்படி ஆட்டம் பிற்பகல் 2 மணிக்கு தொடங்கவுள்ளது.

இந்நிலையில், இறுதிப் போட்டி தொடக்க விழாவை பிரம்மாண்டமான முறையில் 4 கட்டங்களாக நடத்த சர்வதேச கிரிக்கெட் சபையும், இந்தியக் கிரிக்கெட் சபையும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

இறுதிப் போட்டியை ஒட்டி பல்வேறு நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, இன்றைய போட்டிக்கு முன்னர் இந்திய விமானப் படையின் சாகச நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

பிற்பகல் 1.35க்குத் தொடங்கும் சாகச நிகழ்ச்சி 1.50 மணி வரை நடைபெறவுள்ளது.

பின்னர் போட்டியின் முதல் இன்னிங்ஸ் தேநீர் இடைவேளையின் போது ஆதித்யா காத்வியின் இசைக் கச்சேரி நடைபெறும்.

தொடர்ந்து போட்டியின் முதல் இன்னிங்ஸ் இடைவேளையின்போது ப்ரிதம் சக்ரபோர்த்தி, ஜோனிதா காந்தி, நாகாஷ் அசிஸ், அமித் மிஸ்ரா, ஆகாசா சிங் மற்றும் துஷர் ஜோஷி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கும் இசை நிகழ்ச்சி நடைபெறும்.

பின்னர் 2ஆவது இன்னிங்ஸின் தேநீர் இடைவேளையின் போது 'லேசர்' மற்றும் 'லைட் ஷோ' என்பன நடைபெறும்.

இதனிடையே, உலகக் கிண்ண இறுதிப் போட்டியை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும், அவுஸ்திரேலிய துணைப் பிரதமர் ரிச்சர்ட் மார்லஸும் நேரில் காண உள்ளனர்.

இதையடுத்து போட்டிக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து குஜராத் முதல்வர் பூபேந்திர படேல் ஆய்வு நடத்தினார். மைதானம், அணிகள், பிரமுகர்களின் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து நிர்வாகத்தைக் கவனிப்பதற்கு என 4 ஆயிரத்து 500 பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.





# நல்லூரில் நேற்று சூரன் போர்

கந்த சஷ்டி விரத இறுதிநாளான நேற்றைய தினம் நல்லூர் கந்த சுவாமி ஆலயத்தில் சூரன்போர் உற்சவம் இடம்பெற்றது. இதன்போது பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர்.
(படங்கள் :- பிரபாகரன் டிலக்சன்)

















# மாவிட்டபுரத்தில் சூரன் போர்






வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் – மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் இன்றைய தினம் சூரசம்ஹாரம் மிக சிறப்பாக நடைபெற்றது.

முருகனுக்கான கந்தசஷ்டி விரதம் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் ஐந்தாவது நாளான நேற்று சூரசம்ஹாரம் நடைபெற்றது.

இதன்போது பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் ஆலயத்தில் திரண்டிருந்தனர்.

முருகப்பெருமானுக்கும் சூரபத்மனுக்கும் இடையே நடைபெறும் போரை மையமாக கொண்டே சூரசம்ஹாரம் ஆலயங்களில் நடைபெற்று வருகிறது.

# திருக்கேதீஸ்வர ஆலயத்தில் நேற்று பக்தி பூர்வமாக சூரசம்ஹார நிகழ்வு






**(மன்னார் நிருபர்)**

தமிழ்க் கடவுளான முருகப் பெருமானை நோக்கி அனுஷ்டிக்கப்படுகின்ற விரதங்களில் மிகவும் முக்கியமான விரதம் கந்த சஷ்டி விரதமாகும்.

இந்த விரதம் கடந்த ஆறு நாள்களாக நடைபெற்று இறுதி நிகழ்வான சூரசம்ஹார நிகழ்வுகள் நேற்றைய தினம் சனிக்கிழமை மாலை மன்னார் மாவட்டத்தில் உள்ள பல இந்து ஆலயங்களில் சிறப்புற இடம்பெற்றது.

சரவணப் பொய்கையில் ஆறு திருமுகங்களுடன் அவதரித்த முருகனை நோக்கி ஆறு தினங்களுக்கு இந்த விரதம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த கந்த சஷ்டி விரதத்தின் இறுதி நாளான நேற்று சனிக்கிழமை முருகப் பெருமான் மூல மூர்த்தியாக வீற்றிருந்து அருள் பாலிக்கின்ற ஆலயங்களில் சூரன் போர் இடம்பெற்றது.

மன்னாரில் தேவாரப் பாடல் பெற்ற திருத்தலங்களில் ஒன்றான மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் பக்தர்கள் புடைசூழ சூரசம்ஹார நிகழ்வு நேற்று மாலை சிறப்பாக இடம்பெற்றது.

திருக்கேதீஸ்வர ஆலய பிரதம குரு கருணானந்த குருக்கள் தலைமையில் பூஜைகள் இடம்பெற்றன.

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் மேளதாளம், வாத்திய இசை முழங்க, அந்தணச் சிவாச்சாரியர்கள், ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ ஆலய வளாகத்தில் சூரனுடன் போர் செய்து சூரனை வதம் செய்து பக்த அடியார்களுக்கு அருள் பாலித்தார் கந்தவேள்.

# சந்நிதியில் சூரசம்ஹாரம்



வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் – தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நேற்று சூரசம்ஹாரம் மிக சிறப்பாக நடைபெற்றது.

முருகனுக்கான கந்தசஷ்டி விரதம் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் ஐந்தாவது நாளான நேற்று சூரசம்ஹாரம் நடைபெற்றது.

இதன்போது பெருமளவான பக்தர்கள் ஆலயத்தில் திரண்டிருந்தனர்.

முருகப்பெருமானுக்கும் சூரபத்மனுக்கும் இடையேநடைபெறும்போரை மையமாக கொண்டே சூரசம்ஹாரம் ஆலயங்களில் நடைபெற்றது.

















